**04.03.2026**

அ.வ.எண்.83/2020

<u>வா.சா.1 ஜீவபிரியா குறுக்கு விசாரணை</u>

1. தமிழ் எனக்கு எழுத படிக்க தெரியும். வா.சா.ஆ.1 கிரைய பத்திரம் எழுதும்போது நான் படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் உள்ள அனைத்து பக்கங்களையும் நான் படித்து பாரத்துதான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் தனிபட்ட சொத்து கிடையாது, பூர்வீக சொத்து என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் பூர்வீக சொத்து என்பதால் ஏழுமலை வாரிசுகளுக்கு தாவாசொத்தில் உரிமை உண்டு என்றால் முதலில் 1ம் பிரதிவாதிக்கு உரிமையுண்டு, அதன்பின்பு தான் அவரின் வாரிசுகளுக்கு உரிமை வருகிறது.

2. வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தில் உள்ள நான்கு எல்லைகளைதான் தாவாசொத்தின் நான்கு மால்களாக காட்டியுள்ளேன் என்றால் இரண்டு சொத்திற்கும் சேர்த்து ஒரே ஐக்குபந்திதான், ஆனால் ஒரு பக்கம் மால் மட்டும் மாறி வரும். தாவாசொத்து 98 செண்டிற்குதான் தாக்கல் செய்துள்ளேன், ஆனால் மொத்த விஸ்தீரணத்திற்கும் உள்ள நான்கு மால்களை காட்டியுள்ளேன் என்றால் இரண்டு சொத்திற்கும் ஒரே மால்தான். 98 செண்டிற்கு நான்கு மால்கள் மேற்கு பக்கம் ராமாபுரம் செல்லும் சாலை, கிழக்கு பக்கம் நவநீதம்மாள் நிலம், தெற்கு பக்கம் வரதாரெட்டியார் நிலம், வடக்கு பக்கம் தனபால், ஜெயராம ரெட்டியார்

மற்றும் என்னுடைய சர்வே எண்.81/2ன் நிலம் உள்ளது. சர்வே எண்.81/2ல் சொத்தின் நான்கு மால்கள் மேற்கு பக்கம் ராமாபுரம் செல்லும் சாலை, கிழக்கு பக்கம் நவநீதம்மாள் நிலம், வடக்கு பக்கம் ஜெயராம ரெட்டியார் நிலம், தெற்கு பக்கம் வரதாரெட்டியார் நிலம் உள்ளது.

3. சர்வே எண்.81/2ல் 70 செண்ட் நிலத்திற்கு தெற்கு பக்கம் தாவாசொத்து உள்ளது. தாவாசொத்திற்கு வடக்கு பக்கம் நான் கிரையம் வாங்கிய சர்வே எண்.81/2ன் 70 செண்ட் நிலம் உள்ளது என்றால் சரிதான். எனது பிராதில் மேற்சொன்ன தனபால் நிலத்திற்கு தெற்கு மற்றும் சர்வே எண்.81/2 நிலத்திற்கு தெற்கும் தாவாசொத்து உள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், இரண்டு நிலமும் உள்ளது. வா.சா.ஆ.1 கிரைய பத்திரம் எழுதும்போது நான் பட்டாவை பார்த்தேனா என்றால் நான் பார்க்கவில்லை எனது அப்பா பார்த்தார். மேற்சொன்ன பட்டாவை நான் எப்போதும் பார்க்கவில்லை.

4. தாவாசொத்திற்கு வில்லங்கம் பார்த்தேனா என்றால் எனது அப்பாதான் பார்த்தார். இன்றைய தேதிவரை தாவாசொத்தின் வில்லங்கம் பார்த்தேனா என்றால் 2020ம் வருடம் பார்க்கும்போதுதான் சர்வே எண்ணில் திருத்தம் உள்ளது என்று தெரியவந்ததது. வா.சா.ஆ.1 எழுதும்போது 1984ம் ஆண்டு பாகபிரிவினை பத்திரத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் எனது அப்பாதான் பார்த்தார். வா.சா.ஆ.1 கிரைய பத்திரம் பதிவு செய்த காலத்தில் தாவாசொத்தை சர்வேயர் வைத்து அளந்து பார்த்தேனா என்றால் எனது அப்பாவிற்குதான் தெரியும். வா.சா.ஆ.1 கிரைய பத்திரம்

எழுதும் சமயத்தில் கிரைய பத்திரம் பற்றியும், தாவாசொத்தினுடைய விவரங்களை பற்றியும் எனது அப்பாவிற்குதான் தெரியும் என்றால் சரிதான். சர்வே எண்.81/2 ல் சொத்திற்கு எனது பெயரில் பட்டா மாறிவிட்டதா என்றால் மாறிவிட்டது. மேற்சொன்ன பட்டா எப்போது எனது பெயரில் மாறியது என்றால் 2017 ம் வருடம் மாற்றப்பட்டது.

5. 15.06.2017 அன்று வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் உள்ள சர்வே எண் தவறானது என்று எனக்கு தெரிய வந்தது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 ன்படி மேற்சொன்ன விவரம் உண்மை என்றால் சரியல்ல. எனவே இவ்வழக்கு காலவரை சட்டப்படி பாதிப்புக்குள்ளாகியுள்ளது என்றால் சரியல்ல. தாவாசொத்திற்கு ஏதேனும் வரி செலுத்தியுள்ளேனா என்றால் எனக்கு அதை பற்றி எதுவும் தெரியாது. இன்றைய தேதி வரை தாவாசொத்திற்குரிய பட்டா சர்வே எண் தவறாக உள்ளதால் எனது பெயரில் பட்டா மாற்ற முடியவில்லை, ஆனால் நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம், அதனால் தற்போது பட்டா 1ம் பிரதிவாதி பெயரில்தான் உள்ளது. நாங்கள் பட்டா மாற்ற பல முறை தாசிலதார் அலுவலகத்திற்கு மனு கொடுத்துள்ளேன்.

6. வா.சா.ஆ.4 கிரைய ஆவணம் 1ம் பிரதிவாதி தனபால் என்பவருக்கு கிரைய கொடுத்த ஆவணத்தை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் அந்த ஆவணத்தில் தனபால் என்பவருக்கு சர்வே எண்.82/2சி1 என்ற சொத்தில் கிரையம் பெற்றுள்ளார், அதனால் என்னுடைய தாவாசொத்தின் சர்வே எண்.82/2சி2 என்றுதான்

கொடுத்திருக்க வேண்டும் அதனால்தான் வா.சா.ஆ.4 தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.4 ல் புதிய சர்வே எண்.82/2சி1 இல்லை என்றால் சரிதான், முதலில் சர்வெ எண்.82/2சி என்றுதான் இருந்ததது, அவர் கிரையம் பெற்ற பிறகுதான் சர்வே எண்.82/2சி1 மற்றும் 82/2சி2 என்று உட்பிரிவு செய்யபட்டது அதனால் தான் நான் சர்வெ எண்ணை மாற்றிதர 1ம் பிரதிவாதியிடம் கேட்டேன்.

7. சர்வே எண்.82/2சி எப்போது உட்பிரிவு செய்யபட்டது என்றால் தனபால் கவுண்டருக்கும் எனக்கும் விற்ற பிறகுதான் உட்பிரிவு ஆனது. வா.சா.ஆ.2 ஆவணம் வழக்கிற்காக நான் தயார் செய்த ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணம் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சர்வே எண் உட்பிரிவு ஆனதை காட்டுவதற்காக தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.4 முதல் 7 வரையிலான ஆவணம் வழக்கிற்கு சம்பந்தமில்லாத ஆவணம் என்றால் சரியல்ல. தாவாசொத்து சர்வே எண்.82/2சி பிரதிவாதியின் பூர்வீக சொத்து, எனவே அவர் வாரிசுகளுக்குதான் உரிமையுண்டு அதனால் 1ம் பிரதிவாதிக்கு எதிராக மட்டும் தாக்கல் செய்த இவ்வழக்கு நிலைக்கதக்கதல்ல, சட்டபடி செல்லாது என்றால் சரியல்ல.

8. 1ம் பிரதிவாதி சர்வெ எண்.81/2 ல் 70 செண்ட நிலத்தை மட்டும்தான் கிரையம் கொடுக்க கிரைய தொகை பெற்றார், இந்த வழக்கு சொத்தை 1ம் பிரதிவாதி விற்பனை செய்யவில்லை, அதனுடைய கிரைய தொகை வாங்கவில்லை என்றால் சரியில்ல. சர்வே எண்.82/2சி என்ற சொத்தை வா.சா.ஆ.1ல் நாங்களாக எழுதிக் கொண்டு தற்போது திருத்தம்

செய்ய கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளது செல்லாது என்றால் சரியல்ல. எனவே இந்த வழக்கு அதிகபட்ச செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யபடவேண்டும் என்றால் சரியல்ல.